# தமிழர் வாழ்வியலில் ஓவியம் மற்றும் இசைக்கருவிகளின் தொன்மை

## Antiquity of Painting and musical instruments in Tamil life

**முனைவர் வே.ரேணுகா** / Dr.V.Renuka[1]

**Abstract**

For the welfare of ancient Tamils, For well - being The foundation and source was the social structure and administration created by good governance. The true rise of ancient Tamil Nadu in the dichotomy of ruler and ruled was determined by the lifestyle of the people. When the Tamil community, branching out from the individual, began to live in a unified manner, it underwent growth and change, and administration took shape. With vendan as the center of government, the administration of Tamil Nadu was run by Population, taxation, customs, trade, agriculture, weaving, goods gained from war victories, etc. In Tamil Nadu, where many moral ideals were integrated, the code of life, development of thought, customs, artistic sensibilities etc originated. The main objective of this study is to investigate the way of literature, the art of painting and music of ancient Tamils and to know the antiquity of the unique artistic skills of the Tamil language.

Date of submission: 2024-05-30
Date of acceptance: 2024-06-15
Date of Publication: 2024-07-30
Corresponding author's Name:
Dr.V.Renuka
Email: drvrenukatamil@gmail.com

**Keywords:** Administration, Governance, Lifestyle, Growth, War, Victories, Literature, Painting, Music, Unique artistic skills.

### முன்னுரை

பண்டைத் தமிழர்கள் தம் குடிமக்களைப் பாதுகாக்கவும், தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் பல்வேறு கலைகளில் ஈடுபட்டு, தமக்கென ஓர் அடித்தளக் கூறுகளை உருவாக்கிக் கொண்டனர். கற்றற்கு உரியவை எல்லாம் கலைகள் என்னும் அடிப்படையில், உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்ந்த ஓவியக்கலையே தமிழர்களின் முதல் கலையாக இருந்திருக்கக்கூடும் எனக் குறித்துள்ளார் மு.வ. பின்னரே நிகழ்கலைகளாகிய இசை, நடனம், நாடகம், சொற்பொழிவு, தற்காப்பு முதலான கலைகளும் பின் எழுத்துக்கலைகளாகிய கதை, கவிதை, கட்டுரை, நாடகம் போன்ற கலைகள் தமிழ்சமூகத்தில் வளர்ந்திருக்கக்கூடும். எனினும் கலைகளின் தோற்றத்திற்கான சரியான காலகட்டத்தையும், கலைகளின் வகைகளையும் வரையறுக்கவியலாது என்பதே உண்மையாகும்.

'ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்'

(சரசுவதி அந்தாதி - கம்பர்)

எனக் கலைகளைத் தெய்வமாக வழிபட்ட மரபினர் தமிழர்களாவர். அவ்வகையில், தமிழர் வாழ்வியலில் ஓவியம் மற்றும் இசைக்கருவிகளின் தொன்மை குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

[1]The author is a Assistant Professor in the Department of Tamil Vivekanandha College of Arts and Sciences for Women (Autonomous), Tiruchengode. drvrenukatamil@gmail.com

## ஓவியக் கலைகள்

தமிழர்களின் மிகப் பழமையானக் கலை ஓவியமாகும். தமிழக மலைகள், குகைகளில் ஆதித்தமிழரின் தொன்மையான ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் ஓவியங்களைக் ‘கண்ணெழுத்து’, ‘வட்டிகைச்செய்தி’ எனக் குறித்துள்ளன. வண்ணம் கலவாமல் கோடுகளால் வரையப்பட்டது ‘புனையா ஓவியம்’ என்றழைக்கப்பட்டது.

*‘ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்’ (புறநானூறு, பா. 251)*

*‘ஓவத்து அன்ன உருகெழு நெடுநகர்’ (பதிற்றுப்பத்து, பா. 85)*

*‘ஓவத்து அன்ன வினைபுனை நல்லில்’ (அகநானூறு, பா. 98)*

என்றவழி, ஓவியங்களின் மீது பண்டைத்தமிழர்கள் கொண்டிருந்த ஈர்ப்பினை உணரலாம். முற்காலத் தமிழர்களின் ஓவியங்கள் காலவெள்ளத்தில் அழிந்துபட்டிருப்பினும் சங்க இலக்கியங்களின் வாயிலாக கண்கவர் ஓவியங்கள் வரையப்பட்டமையை உணரலாம்.

## முற்காலத் தமிழர் ஓவியங்கள்

சோழன் கரிகாலனின் காவிரிப் பூம்பட்டின அரண்மனைச் சுவரின் மீது பலவகை ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்தது எனவும், அத்தெருவில் ஓடும் தேர்களினால் எழுந்த புழுதியானது படிந்து அவ்வோவியங்கள் அழுக்கேறி இருந்தன எனவும் பட்டினப்பாலைத் தெரிவிக்கின்றது.

*‘தேர் ஓடத் துகள் கெழுமி*

*நீறு ஆடிய களிறு போல*

*வேறுபட்ட வினை ஓவத்து*

*வெண்கோயில் மாசு ஊட்டும்’ (பட்டினப்பாலை, அடி. 47)*

என்றவழி, ஓவியங்கள் நிறைந்த வெண்மையான அரண்மனையில் கரிகாற்சோழன் வீற்றிருந்தான் என்பதை அறியலாம்.

*‘ஒண்சுடர் ஓடைக் களிறு ஏய்க்கும் நின்குன்றத்து*

*எழுது எழில் அம்பலம் காமவேள் அம்பின்*

*தொழில் வீற்றிருந்த நகர்’*

*(பரிபாடல், பா.18)*

என்றவழி, கரிகாற்சோழனது ஆட்சிக்குட்பட்டிருந்த திருப்பரங்குன்றத்தில் எழுதெழில் அம்பலம் என்னும் மண்டபத்தில் ஓவியங்கள் வரையப்பட்டு இருந்துள்ளமையை,

*‘இரதி காமன் இவளிவன் எனாஅ*

*விரகியர் வினவ வினாவிறுப் போரும்*
*இந்திரன் பூசை இவளகலிகை இவன்*

*சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு*

*ஒன்றிய படிவிதென் நுரைசெய் வோரும்*
*இன்ன பலபல யெழுத்துநிலை மண்டபம்’*

*(பரிபாடல், பா.19)*

என்றவழி, அம்மண்டபத்தில் இரதிமன்மதன் கதை, அகலிகை கௌதமன் கதை உள்ளிட்ட புராணக்கதைகள் வரையப்பட்டிருந்தமை புலனாகின்றது.

மேலும் தமிழர் தம் ஓவியங்களாகக் கிடைப்பவை தஞ்சை பெரியகோயில் ஓவியங்களாகும். “கோயில் கோபுரத்தைத் தாங்கி நிற்கும் இரு பெரிய சுவர்களுக்கு இடையே சாந்தாரநாழி எனும் ஆறு அடி அகலமுடைய திருச்சுற்றுப்பாதையில் நாயக்கர் கால ஓவியங்களுக்கு அடியில் மறைந்திருந்த சோழர் கால ஓவியங்கள் தமிழகத் தொல்லியல் துறையால் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.” *(மீட்டெடுக்கப்பட்ட சோழர் கால ஓவியங்கள், 05.02.2020, தினமணி)* இதில் சிவபெருமானின் முப்புர வரலாறு, நாயன்மார்களின் வாழ்க்கைச் சம்பவங்கள், தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடையும் காட்சி, சும்பன், நிசும்பனை அழிக்கும் துர்க்கையின் போர்த் தோற்றம் மற்றும் திருமால், இந்திரன், அக்கினி, வாயு, இரம்பை, ஊர்வசி, திசைக்காவலர்கள், களிறுகள், பெண்கள் உள்ளிட்டோரின் ஓவியங்கள் காணப்படுகின்றன.

## தமிழர்களின் ஓவியத் தொழில்நுட்பம்

சுவரின்மீது நன்கு அரைக்கப்பட்ட சுண்ணாம்புக் கலவையைச் சற்றுத் தடிமனாகப் பூசி, அக்கலவையின் ஈரம் ஓரளவு காய்ந்த நிலையில் மீண்டும் அதன் மேல் சற்று மெலிதான சுண்ணாம்புக் கலவையைப் பூசியுள்ளனர். இச்சுண்ணாம்புக் கலவையின் ஈரம் உலர்வதற்கு முன்பாக வெளிக்கோடுகள் வரைந்து வர்ணத்தைப் பூசியுள்ளனர். இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி வெயில், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படாத பல்லாயிரம் ஆண்டுகள் நிலைத்து இருக்கக்கூடிய ஓவியங்களை பிற்காலத் தமிழர்கள் வரைந்தனர். "இவ்வோவியங்கள் உலர, உலர மெல்லிய முதல் சுண்ணாம்பு பூச்சின் மேல் முதல் ஓவியப்படியும், அதன் அடியில் உள்ள தடிப்பான சுண்ணாம்பு பூச்சின் மேல் ஓவியத்தின் அதே படியும் பரந்து பதிகிறது. அதாவது இரண்டு அடுக்குகளில் ஓவியம் நிலைகொள்கிறது. இவ்வகை ஓவியத்தை *WET FRESCO* என்கிறார்கள்." *(சோழர் கால ஓவியங்கள், 05.10.2019,* சோழநாடு, பேஸ்புக்*)* இம்முறையில் வரையப்பட்ட ஓவியங்கள் பல ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் தனது பொலிவை இழக்காது. அதனால்தான் தஞ்சை பெரிய கோயில் சோழர் கால ஓவியத்திற்கு மேல் வரையப்பட்ட நாயக்கர் கால ஓவியத்தை இராசயனம் கொண்டு தொல்லியல் துறையினர் அகற்றிய பின்னும், இராசயனத் தாக்கம், மேல் வரையப்பட்ட ஓவியத்தின் அழுத்தம் ஆகியவற்றைக் கடந்து, பிற்காலச் சோழர்களின் ஓவியங்கள் இன்றளவும் தெளிவுற காட்சியளிக்கின்றன எனலாம்.

## இசைக்கருவிகள்

பண்டையத் தமிழர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் குறித்து அறிந்துகொள்ள புறநானூறு துணைநிற்கின்றது. தடாரிப்பறை, கிணைப்பறை போன்றவற்றை ஒலித்து இசையெழுப்புதல் முற்காலத் தமிழ்நாட்டில் வழக்கமாக இருந்துள்ளது.

*'என் தெண் கிணைக் குரலே'* (புறம், *பா. 400)*

*'எனதேகிடைக் காழன்ன தெண்கண் மாக்கிணை*

*கண் அகத்து யாத்த நுண் அரிச் சிறுகோல்*

*ஏறிதொறும் நுடங்கியாங்கு நின் பகைஞர்*

*கேட்டொறும் நடுங்க ஏத்துவென்'* (புறம். *பா. 382)*

என்றவழி, பறை ஒலிக்கும் போது சிறியதடி கொண்டு, பறையின் கண் பகுதியானது நடுங்கும்படி, அடித்து இசையெழுப்பும் வழக்கம் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. போர்க்களத்திற்குப் புறப்படும் முன்னும், போர்க்களத்திலும் சங்கினை முழங்கியுள்ளனர்.

*'ஒருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி' (புறம். பா. 225)*

என்றதன் வாயிலாக வலம்புரிச் சங்கினை ஊதி ஒலி எழுப்புதல் முற்காலத் தமிழர்களின் வழக்கமென்பதை அறியலாம். இவையன்றி, தமிழக வேந்தர்கள் தமது வெண்கொற்றக்குடையுடன் அரசவையில் வீற்றிருக்கும் போதும் முரசம் என்னும் இசைக்கருவியை முழக்கி ஒலி எழுப்பப்பட்டுள்ளது. இதனை

*'முரசுகெழு வேந்தர் அரசுகெழு திருவே' (புறம். பா. 75)*

எனப் புறநானூறு எடுத்துரைக்கின்றது.

கலிங்கத்துப்பரணி, சோழப்படைகள் கலிங்கம் நோக்கிப் போர் மேற்கொள்ளத் திரண்ட பாங்கினை,

*'வளைக லிப்பவு முரசொ லிப்பவும்*

*மர மிரட்டவும் வயிரமாத்*

*தொளை யிசைப்பவும் திசை'*

(கலிங்கத்துப்பரணி, காளிக்கு கூளி கூறியது, *பா .33)*

என எடுத்துரைக்கின்றது. இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி படை திரட்டும் பொழுதே இசைக்கருவிகள் முழக்கப்பட்டதற்கான காரணத்தை ஆராயும் பொழுது, இசையானது மனித உள்ளத்தை வீறுகொண்டு எழ வைக்கும் என்பதை தமிழக வேந்தர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பது அறியலாகின்றது. ஆதலால், இசையொலிக்க கலிங்கநாட்டிற்குள்

கடல் அலை போன்ற ஆரவாரத்துடன் சோழநாட்டுப் படைவீரர்கள் புகுந்துள்ளனர். இக்காட்சிதனைக் கலிங்கத்துப்பரணி,

*'கடையிற் புடைபெயர் கடலொத் தமரர்*

*கலங்கும் பரிசு கலிங்கம் புக்க'*

*(கலிங்கத்துப்பரணி, காளிக்கு கூளி கூறியது, பா.59)*

எனவுரைக்கின்றது.

*'எடுமெடு மெடுமென வெடுத்ததோர்*

*இகலொலி கடலொலி யிகக்கவே*

*விடுவிடு விடுபரி கரிக்குழாம்*

*விடும்விடு மெனுமொலி மிகைக்கவே'*

*(கலிங்கத்துப்பரணி, போர் பாடியது, பா 1)*

என்னும் படியாக போர் முரசம் அதிரத் தொடங்கியவுடன் நால்வகைப் படைகளும் எதிர் கொண்டு போர் புரியத் தொடங்கின எனக் காட்டுகின்றார் சயங்கொண்டார். இவ்விடத்தில் சயங்கொண்டாரின் எழுத்து நடையும் இசையொலியை அதிரவைப்பது தமிழுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

**முடிவுரை**

தமிழர் வாழ்வியலில் ஓவியம் மற்றும் இசைக்கருவிகளின் தொன்மை என்னும் இக்கட்டுரையின் வாயிலாகப் பண்டைத் தமிழர்களின் ஓவியக்காட்சிகள் மற்றும் ஓவியநுட்பங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. மேலும், முற்காலத் தமிழர்களின் பறை முதலான இசைக்கருவிகள் மற்றும் இசைக்கருவிகளைப் பயன்படுத்தியதற்கான காரணங்கள், பயன்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

**References**

Balasubramaniyan. (1981). *Pathittru Pattu.* Chennai: New Chenchury Book House.

Palanivelappan. (1996). *Kalingathu Barani.* Chennai: Saiva siththantha kalagam.

Puliyur Kesigan. (2010). *Aganancoru urai.* Chennai: Saratha Pathipagam.

Puliyur kesigan. (2010). *Paripadal.* Chennai: Sri Senbaga Pathipagam.

Puliyur kesigan. (2010). *Purananooru urai.* Chennai: Saratha Pathipagam.

Samy Sithambaranar. (2008). *Pattina Palai.* Chennai: Arivu Pathipagam.